**<u>O.S.No.465/2019</u>**

**<u>PW2 :</u>** மதன் தேதி 10.3.2026

<u>வாசா2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. தாவா விபரம் எனக்கு தெரியும். மேற்படி தாவாவில் எந்த இடத்திலும் என் பெயரை சாட்சியாக சொல்லவில்லை என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அன்று கடும் மழை மற்றும் இடி, மின்னல் காரணமாக மேற்படி கட்டிடம் சாய்ந்து விட்டது என்று சொன்னால் மழை பெய்தது, ஆனால் இடி மின்னல் இல்லை, மேற்படி மழையின் காரணமாக கட்டிடம் விழவில்லை. பிரமாண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது. விபத்து சம்பந்தமாக போலீசார் எப்.ஐ.ஆர் பதிவு செய்த விபரம் தற்போது தெரிந்து கொண்டேன். நான் காவல்நிலையத்தில் சாட்சி சொல்ல செல்லவில்லை. எப்.ஆர்.ஆர்-ல் இரண்டு பேர் தான் விபத்தில் இறந்துவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றும், 3 பேர் என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. காயம்பட்டவரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பியிருக்கிறேன் என்று சொல்லியுள்ளேன், அவருடைய பெயர், விலாசம் தெரியாது. வழக்கின் வாதி எனக்கு தெரிந்த நபர் என்பதால் சம்பவத்தை பார்க்காமலேயே நான் பார்த்ததாக தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.